

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஜூலை 29, 2021 | புரட்சி 20 | முழக்கம் 22 | விலை: ரூ.3.00


# தேச விரோத சட்டங்களை முறைகேடாகப் பயன்படுத்துவதா? முன்னாள் நீதிபதிகள் கடும் கண்டனம்

***அரசுக்கு எதிராகக் கருத்துக் கூறுபவர்களை யெல்லாம் சிறையில் அடைப்பதா? என்றும் போலீஸ் ராஜ்ஜியத்தில் வாழ்ந்து கொண்டிருக் கிறோமா? என்றும் தேசத் துரோக சட்டத்திற்கு எதிராக உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் கோபத்துடன் கேள்வி எழுப்பியுள்ளனர்.***

சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்டம் மற்றும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் தேசத் துரோகக் குற்றப் பிரிவு முதலான குற்றப் பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டு பல மாதங்களாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இதழாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள மன வேதனைகளையும் துன்ப துயரங்களையும் நீதிமன்றங்கள், சமூகம் மற்றும் அரசாங்கம் பரிசீலனை செய்திட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி மதன் பி.லோகூர் வலியுறுத்தியுள்ளார். சனிக்கிழமையன்று (ஜூலை 24) தில்லியில் முன்னாள் நீதிபதிகள் பங்கேற்ற ‘சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்டத்தின் மோசமான பாதிப்புகள் மீது இணையவழி மாநாடு’ சனிக் கிழமை யன்று நடைபெற்றது. அப் போது நீதிபதி மதன் பி.லோகூர் இவ்வாறு கூறினார்.

சிறைகளில் சுகாதார வசதியின்றி சித்ரவதை அவர் மேலும் பேசியதாவது: “அரசாங்கத்திற்கு எதிராகக் கருத்து வேறுபாடுகளைக் கூறியதற்காகவே தேசத் துரோகிகள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து அவர் தம் குடும்பத்தினரும் நண்பர்களும் எந்தவிதமான சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று கேட் கிறார்கள். இவ்வாறு சிறையில் அடைக்கப் பட்டிருப்பவர்களின் குடும்பத்தினர், குழந்தைகள் மீது ஏற்பட்டுள்ள மன உளைச்சல்கள் மற்றும் பாதிப்புகளைப் பாருங்கள். அக்குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்போது அவர்களுடைய வகுப்பு மாணவர்கள், “என்ன உங்கள் தந்தை ஒரு பயங்கரவாதியாமே!” என்று இவர்களைப் பார்த்துக் கேட்கிறார்கள். அவர் இது தொடர்பாக எதுவுமே செய்யாத நிலையில் இவ்வாறு கேட்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சிறைகளில் அதிக அளவில் சிறை வாசிகளை அடைத்துவைத்திருப்பதன் மூலம் ஒருவிதமான “மென்மையான சித்ரவதை” (soft torture) மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எவ்விதமான சுகாதாரமான வசதியுமின்றி அவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருக் கிறார்கள்’’.இவ்வாறு மதன் பி.லோகூர் கூறினார்.

உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி தீபக் குப்தா, பார்க்கின்சன் நோயால்பாதிக்கப் பட்டிருந்த அருட்தந்தை ஸ்டான் ஸ்வாமி மரணத்தைச் சுட்டிக்காட்டி, “நாம் எல்லாம் மனிதர்கள் தானா?” என்று கேள்வி எழுப்பினார். “பசு மூத்திரம் கோவிட்-19 தொற்றைப் போக்க ஒரு மருந்து கிடையாது என்று சொன்னதற்காக மணிப்பூரில் ஒருவர் மீது தேசத் துரோகக் குற்றப் பிரிவு சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக் கிறார். நாம் என்ன போலீஸ் ராஜ்ஜியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா?” என்றும் அவர் கேள்வி எழுப்பினார். “சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்டம் முறைகேடாக செய்யப்பட முடியும் என்பதற்கு இவை யெல்லாம் நிரூபணங்களாக இருக்கின்றன. எனவே நீதிமன்றங்கள் அரசமைப்புச் சட்டத்தின் 142 ஆவது பிரிவின்கீழ் தலையிட்டு, சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவது குறித்த வழி காட்டும் நெறிமுறைகளை ஏற்படுத்திட வேண்டும்” என்றும் கேட்டுக் கொண்ட குப்தா, இப்போதுள்ள வடிவத்தில் இந்த சட்டம் நீடிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி அப்தாப் ஆலம் பேசுகையில், ‘‘அரசாங்கம் தங்கள் அரசுக்கு எதிராகக் கருத்துக் கூறுபவர்களை யெல்லாம் இந்தச் சட்டத்தின் மூலம் அடைத்து வைத்திருப்பதன் மூலம் இந்த அரசாங்கம் உண்மையான பயங்கரவாத வழக்குகளிலிருந்து தன் கவனத்தைத் திசை திருப்பி இருக்கிறது. பல ஆண்டுகாலமாக சிறையிலிருப்பதன் காரணமாக பலருடைய வாழ்க்கை அழிந்துவிட்டது. சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்டத்தின் கீழ் ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். ஆனால் அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படுவது அரிதிலும் அரி தாகும். நாம் எவ்விதமான அரசாங்கத்தைப் பெற வேண்டும் என்று நிர்ணயிப்பதற்கான காலம் வந்துவிட்டது. சட்ட விரோத நடவடிக்கைகள் தடைச் சட்டத்தின்கீழ் ஏராளமானவர்களைச் சிறையில் அடைத்து வைத்திடும் இதுபோன்ற வலுவான அரசாங்கத்தையா நாம் விரும்புகிறோம்?” என்று அவர் கேள்வி எழுப்பினார்.

நீதிபதி கோபால கவுடா பேசுகையில், “இந்த அரசாங்கம் மனித உரிமைப் போராளி களுக்கும், பயங்கரவாதத்திற்கும் இடையே யான யுத்தமாக இதனைப் பார்க்கிறது. மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்டால், பயங்கரவாதம் தானாகவே இயற்கையான மரணத்தைத் தழுவி விடும். ஒரு சட்டம், அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டுள்ள நீதிமன்றங்களே பிணையில் விட முடியாது என்று கூறுமானால் அதுவே அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமான தாகும்.

அரசாங்கம் தங்கள் அரசாங்கத்திற்கு எதிராகக் கருத்துக் கூறுபவர்களை சட்ட விரோத நடவடிக்கைகள் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில்அடைத்தால் அவர்களைப் பிணையில் விடுவதற்குத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று நீதிமன்றங்கள் கூறக்கூடாது. அருட்தந்தை ஸ்டான் ஸ்வாமி மரணம் அடைவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள் பயங்கர மானவைகளாகும். தேசியப் புலனாய்வு முகமையும், நீதிமன்றங்களும் அவர் பிணையில் செல்வதற்குத் தகுதி படைத்தவர் என்பதைப் பரிசீலனை செய்யத் தவறி விட்டன” என்று கவுடா கூறினார்.

# ஆணவக் கொலை தடுப்புச் சட்டம்: அமைச்சரிடம் கழகம் மனு



**சா**தி ஒழிப்பு முன்னணி மற்றும் தி.வி.க சார்பில் ஜூலை 19, 2021 காலை 11 மணியளவில் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்களை சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்து ஆணவக் கொலைகளைத் தடுக்க உரிய சட்டம் இயற்ற வேண்டும், கொலையுண்டவர்களின் குடும்பத் தினருக்கு உரிய உதவிகள் உடனே வழங்கப்பட வேண்டும், உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டு தல்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண் டும் என கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், தமிழ்த் தேச மக்கள் முன்னணி செந்தில், ஸ்ரீராம், ஜாதி ஒழிப்பு முன்னணி ரமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பகுஜன் சமாஜ்வாதி கட்சி நடத்திய "பிராமண" சம்மேளனம்

மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி சமீபத்தில் மிகப் பெரிய பிராமண சம்மேளனத்தை நடத்தி முடித்திருக்கிறது. அயோத்தியாவில் வேத மந்திரங்கள் முழங்க துவங்கிய இந்த மாநாடு, "ஜெய் பீம், ஜெய் பாரத், ஜெய் ஸ்ரீராம், ஜெய் பரசுராம்" முழக்கங் களோடு முடிவடைந்திருக்கிறது.

இது தொடர்பாக பிபிசி இந்தி இணையத்தில் செய்தியாளர் சமீராத்மஜ் மிஸ்ரா எழுதியுள்ள கட்டுரை.

துவக்கத்தில் 'பிராமண' சம்மேளனம் என பெயரிடப்பட்டிருந்த நிலையில், ஜாதியின் பெயரால் யாரும் கூட்டங்களை நடத்தக்கூடாது என அலகாபாத் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதால், இந்த மாநாட்டின் பெயர் 'ஞானம் பெற்ற வகுப்பினரின் சித்தனை கருத்தரங்கு' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சதீஷ் சந்திர மிஸ்ராதான் இந்தக் கருத்தரங்கின் சிறப்பு விருந்தினர். இந்தக் கருத்தரங்கின் அடுத்த கட்டம் மதுராவிலும் மூன்றாவது கட்டம் காசியிலும் நான்காவது கட்டம் சித்திர கூட்டிலும் நடக்குமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டத்திற்கு இரண்டு மணிநேரம் தாமதமாக வந்த சதீஷ் சந்திர மிஸ்ரா, அங்கு வருவதற்கு முன்பாக ராம்லல்லாவுக்கும் ஹனுமான்கடிக்கும் சென்றுவிட்டு வந்ததாகக் குறிப்பிட்டார். கூட்டத்தில் பேசிய சதீஷ் சந்திர மிஸ்ரா, பா.ஜ.க., விஷ்வ ஹிந்து பரிஷத் ஆகியவற்றிடம் கடுமையான கேள்விகளை எழுப்பினார்.

"இராமர் கோவிலுக்காக கடந்த 30 ஆண்டுகளாக வசூலிக்கப்பட்ட பணத்திற்கு என்ன கணக்கு? அயோத்தியின் பெயரால் இலட்சம் இலட்சமாக, கோடி கோடியாக வசூலித்தனர். இப்போது மீண்டும் பணம் கேட்கின்றனர். ஒரு வருடமாகிவிட்டது. இன்னும் அஸ்திவாரம்கூட போடப்படவில்லை. கோவிலைக் கட்டுவார்களா இல்லையா என்பதே கேள்வியாக இருக்கிறது" என்றார் அவர்.

அயோத்தி - லக்னௌ நெடுஞ்சாலையில் அமைந்திருந்த ஒரு ஓய்வு உல்லாச விடுதியில் நடந்த இந்தக் கூட்டத்தில் 50 பேர்தான் அனுமதிக்கப்படுவார்கள் என்று சொன்னாலும் நூற்றுக்கணக்கான வர்கள் இங்கே குவிந்தனர்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வந்திருந்த பார்ப்பனரான சர்வேஷ் குமார் பாண்டே, நான்காண்டுகளாக பிராமணர்கள் மீது இல்லாத அக்கறை திடீரென இப்போது வந்தது ஏன் என்கிறார். அருகில் நின்று கொண்டிருந்த அமர்சந்திர தூபே, "எல்லாவற்றுக்கும் நேரம் வர வேண்டாமா? கான்பூரில் விகாஸ் தூபே கொல்லப்பட்ட போதுகூட பிஎஸ்பி போராட்டம் நடத்தியது. 2022இல் நாம் பாடம் கற்பிப்போம்" என்கிறார்.

'விகாஸ் துபே' என்ற வன்முறையாளர் அதிகாரங்களின் துணை யோடு உ.பி.யில் ரவுடியாக வலம் வந்தவர். பல படுகொலைகளை செய்து சட்டம் நெருங்க முடியாத நிலையில் இருந்தார். 8 காவல் துறையினரை சுட்டுக் கொன்றதால் ஆதித்ய நாத் ஆட்சியில் 'என் கவுன்டரில்' கொல்லப்பட்டார். ஆனாலும் 'பிராமணர்' ரவுடியாக இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதே 'மனு சாஸ்திரம்' கூறுகிறது. மாயாவதியும் 'விகாஸ் துபே' கொல்லப் பட்டதை எதிர்த்து போராட்டம் நடத்தினார்.

"பிராமண"ரான சதீஷ் சந்திர மிஸ்ரா, பிஎஸ்பியில் சேர்ந்ததற்கான காரணத்தை இங்கு விளக்கினார். "மாநிலத்தில் 13 சதவீதமாக உள்ள பிராமணர்கள் 23 சதவீதமுள்ள தலித்களுடன் இணைந்தால் வெற்றி நிச்சயம்" என்கிறார்.

மிகப் பெரிய ரவுடியான விகாஸ் துபே என்கவுன்டரில் கொல்லப் பட்டது குறித்தும் கேள்வியெழுப்பினார் சதீஷ் மிஸ்ரா. கடந்த நான்காண்டுகளில் பல பிராமணர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்தக் கருத்தரங்கில் பெண்களின் பங்கேற்பு என்பது சுத்தமாக இல்லை. இதற்கு அடுத்தடுத்த 'ஞானம்பெற்ற வகுப்பினரின் சித்தனை கருத்தரங்கை' அலகாபாத், பிரதாப்கர், கௌஷாம்பி, சுல்தான்பூர் ஆகிய இடங்களில் பிஎஸ்பி நடத்தவிருக்கிறது. அக்டோபர் 15க்குள் எல்லா நகரங்களிலும் இந்தக் கருத்தரங்கை நடத்தி முடிக்கத் திட்டமிட்டிருக்கிறது பிஎஸ்பி. இதன் முத்தாய்ப்பாக மிகப் பெரிய மாநாடு லக்னௌவில் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

2007இல் ஒரு புதிய சமூகப் பொறியியல் வியூகத்தைக் கையில் எடுத்து, பார்ப்பனர்களையும் தங்கள் அணிக்குச் சேர்த்தது. இதன் மூலம் ஆட்சியையும் பிடிக்க முடிந்தது. ஆனால், அந்தக் கட்டத்தில் அவருடன் இருந்த பார்ப்பன தலைவர்கள் யாரும் இப்போது பிஎஸ்பியில் இல்லை. பா.ஜ.க.வுக்கு ஓடி விட்டனர். 14 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் மீண்டும் அதே சமூகத் திட்டத்தைக் கையில் எடுக்கிறது பிஎஸ்பி.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 29.07.2021**

# புரட்சிக் கவிஞர் பாவாணர் பாடல்களைத் தொகுத்த இரா.இளங்குமரனார் முடிவெய்தினார்



தமிழக அரசின் திரு.வி.க. விருது பெற்ற மூத்த தமிழறிஞரான முதுமுனைவர் இரா.இளங்குமரனார் நேற்று (ஜூலை 25) இரவு முடிவெய்தினார். அவருக்கு வயது 94. இறுதி நிகழ்ச்சிகள் இன்று மாலை (ஜூலை 26) 4 மணிக்கு மதுரை திருநகர் இராமன் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து, உடல் நல்லடக்கம் நடைபெறும். மறைந்த தமிழறிஞர் இரா.இளங்குமரனாருக்கு இளங்கோவன், பாரதி ஆகிய 2 மகன்களும், இரு மகள்களும் உள்ளனர். பேத்தி முத்தரசி ஐபிஎஸ் அதிகாரியாகப் பணியாற்றுகிறார்.

முதுமுனைவர் இரா.இளங்குமரனார் 30.1.1927 இல் நெல்லை மாவட்டம் வாழவந்தாள்புரம் கிராமத்தில் பிறந்தவர். தந்தை படிக்கராமு, தாயார் பெயர் வாழவந்த அம்மை. இளம் வயதிலேயே சொந்தமாக பாடல் இயற்றும் அளவுக்கு தமிழ் ஆர்வமும், புலமைத்திறனும் பெற்ற இவருக்கு 19 வயதிலேயே (4.8.1946) சங்கரன்கோவில் அருகில் உள்ள கரிவலம்வந்தநல்லூர் பள்ளியில் தமிழாசிரியர் பணி கிடைத்தது. பிறகு முறைப்படி புலவர் படிப்புக்கான தேர்வு எழுதி, 1951இல் சென்னை பல்கலைக்கழகத்தில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றார். முழுமையாக கிடைக்கப் பெறாமல், காலத்தால் செல்லரித்துப்போன குண்டலகேசி காப்பியத்தை தன்னுடைய கற்பனைத் திறனாலும், கவிதை இயற்றும் ஆர்வத்தாலும் முழுமை செய்தவர். அந்நூலினை 1958இல் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் அரங்கேற்றம் செய்தார்.

1963இல் இவர் எழுதிய திருக்குறள் கட்டுரை தொகுப்பு நூலை, தமிழகம் வந்திருந்த அன்றைய பிரதமர் நேரு வெளியிட்டார். தேவநேயப் பாவாணர், பாவேந்தர் பாரதிதாசன், தொல்காப்பியர் ஆகியோரின் முழு படைப்புகளையும் தொகுக்கிற பணியும் அவர் செய்தார்.

காரைக்குடி அருகே உள்ள திருக்கோவிலூர் மடம் சார்பில், சங்க இலக்கிய வரிசை நூல்களைத் தொகுக்கும் பணி நடைபெற்றபோது அதில் புறநானூற்றை எளிய தமிழில் எழுதியவரும் இவரே. இந்தத் தொகுப்பு நூலை 2003-ம் ஆண்டு அன்றைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வெளியிட்டார். இவரது நூல்கள் பலவற்றை மதுரை பாரதி புத்தக நிலையமும் வெளியிட்டுள்ளது.

திருநகர் முத்துத்தேவர் முக்குலத்தோர் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்த காலத்திலேயே, மதுரை மாவட்ட தமிழாசிரியர் கழகச் செயலாளர், தமிழ்க் காப்பு கழகச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளையும் கவனித்தார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய தமிழண்ணல், பள்ளி ஆசிரியராக இருந்த இளங்குமரனாரை பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பிக்கும் பணிக்கும் பயன்படுத்திக் கொண்டார்.

திருச்சியில் திருவள்ளுவர் தவச்சாலை என்ற பெயரில் தமிழ்ப்பணி ஆற்றிவந்த இவர், அங்கே 45,000 நூல்கள் கொண்ட நூலகத்தையும் நடத்தினார். பிற்காலத்தில் அதில் 40 ஆயிரம் நூல்களை எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்துக்கு நன்கொடையாக வழங்கினார்.

வயது முதிர்வு காரணமாக மதுரை திருநகருக்கே திரும்பிய பின்னரும் கூட அவர் தமிழ்ப்பணியை நிறுத்திக்கொள்ளவில்லை. மதுரை வடக்குமாசி வீதியில் உள்ள மணியம்மை பள்ளியில் மாதந்தோறும் நடைபெறுகிற கருத்தரங்குகளில் பங்கேற்றார். பல்வேறு விருதுகளைப் பெற்ற விருதுகளுக்கான பரிசுத் தொகையை தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கே செலவிட்டவர் இரா. இளங்குமரனார்.

21 குண்டுகள் முழங்க இளங்குமரனார் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

# பாஜக, பாமக இல்லாத வன்கொடுமை தடுப்புச் சட்டக் குழு

ஜாதி ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வர வலியுறுத்தி தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரிடம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், இரு தினங்களுக்கு முன்பு கழக தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர் உள்ளிட்ட தோழர்கள் நேரில் மனு ஒன்றை அளித்தனர். இப்போது அது தொடர்பாக ஒரு நல்ல செய்தி வந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் பட்டியலின, பழங்குடியின மக்களின் நல்வாழ்வுக்கான கமிட்டிக்கு புத்துயிர் அளித்து கமிட்டி புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாட்டில் 45 தனித் தொகுதியைச் சேர்ந்த அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், தொல்.திருமாவளவன், இரவிக்குமார் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் இடம்பெற்று இருக்கிறார்கள். 62 பேர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். முன்னாள் சட்டமன்ற சபாநாயகர் தனபாலும் இதில் இடம் பெற்றிருக்கிறார். பாரதிய ஜனதா கட்சி, பாமக கட்சியைத் தவிர மற்ற அனைத்துக் கட்சியையும் சேர்ந்த சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழு, வன்கொடுமை தடுப்புச் சட்டம் முறையாக செயல்படுத்தப்படுகிறதா என்பதை அவ்வப்போது கூடி கண்காணிக்கும் என்கிற அறிவிப்பும் வெளிவந்திருக்கிறது. 1996 ஆம் ஆண்டு இதே போன்று ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு அது செயல் படாமல் முடங்கிக்கிடந்த நிலையில் அதற்கு புத்துயிர் கொடுக்கின்ற ஒரு நடவடிக்கையை தமிழக அரசு இப்போது மேற்கொண்டு இருப்பது பாராட்டி வரவேற்கத்தக்கதாகும்.

## மதத்தில் அரசு தலையிடக் கூடாதா?



மதத்தில் சர்க்கார் புகுந்து விட்டார்கள், சர்க்கார் புக நம் மந்திரிகள் இடம் கொடுத்துவிட்டார்கள் ? என்று சப்தம் போட்டார்களே, சர்க்கார் எதில் புகுந்து விட்டார்கள் ? எப்பொழுது புகுந்து விட்டார்கள் ? இதற்கு முன்பு புகவில்லையா என்பதற்கு இவர்கள் பதில் சொல்ல முடியுமா ? இந்துமத சாமியின் நெற்றியில் வைக்கும் நாமம் (குறி)வடகலையா ? தென்கலையா ? என்பதைக் கண்டுபிடிக்க, நமது மத ஆதாரங்களான நமது வேத சாஸ்திர நூல்களில் நமக்கு முடிவதில்லை. வெள்ளைக்கார ஜட்ஜூ சொன்னால்தான் நாமும் ஒப்புக் கொள்ளு கிறோம். நமது கோயில்களில் தேவார பாராயணம் செய்யலாமா, வேண்டாமா என்பதற்கு வெள்ளைக்கார கோர்ட்டால் முடிவுபெற வேண்டியிருக்கிறது. இப்படி இருக்கும் போது, நமது மதத்திற்கு ஏதாவது பொதுக்கொள்கை உண்டா ? சுயமரியாதை உண்டா? ஆகவே நமது அஸ்திவாரமே அதன் தத்துவமே நமக்கு இன்னது என்று சொல்ல முடியாமலிருக்கும்போது, அதிலிருந்து ஏற்பட்ட ஆபாசக் கட்டுப்பாடுகளைப் பற்றியும், அர்த்தமற்ற சடங்குகளைப் பற்றியும் கவலை செலுத்துவது எவ்வளவு முட்டாள்தனமான காரியம் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

**குடி அரசு 03.04.1927**

# பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (4)

# மாகாண சுயாட்சி வழங்கிய சைமன் ஆணையம்

*கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'ஒன்றியம்' என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.*

**விடுதலை இராசேந்திரன்**

பிரிட்டிஷ் ஆட்சி மாகாணங்களுக்கு உரிமைகள் வழங்குவது குறித்து அனுப்பிய சைமன் ஆணையம் குறித்து கடந்த இதழில் குறிப்பிட் டிருந்தோம். பெரியார் சுயமரியாதை இயக்கம் இதை வரவேற்றது. காங்கிரஸ் கடுமையாக எதிர்த்தது. பெரியார் பிரிட்டிஷ் ஆட்சிக்கு வால் பிடிக்கிறார்; தேசத் துரோகி என்று குற்றம் சாட்டினார்.

**சைமன் ஆணையம்! ஆதரவும் எதிர்ப்பும்**

இது குறித்த ஒரு வரலாற்று விளக்கத்தை இளைய தலைமுறையினருக்கு விளக்கியாக வேண்டும். சைமன் ஆணையத்தில் இடம் பெற்றிருந்த 7 உறுப்பினர்களில் ஒருவர்கூட இந்தியர் இல்லை என்று கூறி அன்று காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஆணையத்தைப் புறக்கணித்தபோது, பெரியாரின் சுயமரியாதை இயக்கம், இந்தியர்களின் கருத்துகளைக் கேட்க வந்த அந்த ஆணையத்தை வரவேற்றது. முதலில் தயக்கம் காட்டிய நீதிக்கட்சி, பிறகு ஆணையத் திடம் கருத்து கூறும் முடிவுக்கு வந்தது. 1929இல் செங்கல்பட்டில் பெரியார் கூட்டிய முதல் சுயமரியாதை மாநாட்டில் பெரியார் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம், பெரியார் ஏன் வரவேற்றார் என்பதை தெளிவாக விளக்குகிறது. ஆணையத்தில் இந்தியர்கள் இடம் பெற முடியாது போனதற்குக் காரணம், அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் பிரிந்திய பிரதிநிதி என்று ஒருவரும் இல்லை. இந்தியாவில் அப்போது பல்வேறு வகுப்பினரின் உரிமைகள் கருத்துகள் ஒன்றுக்கொன்று மாறாக இருக்கும் நிலையில் பல்வேறு வகுப்புகளில் பிரதிநிதி களையும் சட்டப்படியான உரிமைகளைப் பரிசீலிக்கும் ஆணையத்தில் இடம் பெறச் செய்ய இயலாது என்ற அடிப்படையில் பிரிட்டிஷ் ஆட்சி இதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்தியிருப்பதை சுய மரியாதை மாநாட்டின் தீர்மானம் சுட்டிக் காட்டியது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்தியாவையே நிர்வகித்து வரும் அதிகாரம் பெற்றிருப்பதை ஏற்றுக் கொண்டு அனைத்துக் கட்சிகளும் அடங்கி ஒத்துழைக்கும்போது அதே நாடாளு மன்றம் நியமித்துள்ள இந்த ஆணையத்தின் முன் சாட்சியம் கூறுவது, இந்திய சுயமரியாதைக்கு எதிரானது என்று (காங்கிரஸ்) கூறுவது பொருத்தமற்ற வாதம் என்று கூறிய அத் தீர்மானம், சுயமரியாதை இயக்கத்தின் கருத்து களையும் நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்கு ஆணையத்தின் முன் கருத்துகளைப் பதிவு செய்து, அதற்கான வழிமுறைகளைத் தேடுவதே சரியான அணுகுமுறை என்றும் தெளிவு படுத்தியது. பெரியார் கொண்டு வந்த தீர்மானத்தை வழி மொழிந்து பேசிய சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஜனகங்கர கண்ணப்பர் சுயராஜ்யமே நமது இறுதி இலட்சியம்; அதனை அடைவதற்கான வாய்ப்புகளை முன்னெடுப்பதற்கு இந்த ஆணை யத்தின் முன் கருத்துகளைப் பதிவு செய்வதே இயக்கத்தின் நோக்கம் என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

இந்தியர்களுக்கு பிரதிநிதித்துவம் என்ற போர்வையில் பார்ப்பனர்களே பல்வேறு அமைப்புகளில் பங்கேற்று வந்ததை சுட்டிக் காட்டிய பெரியார், இந்தியர்கள் என்ற பெயரில் அவர்கள் தான் இந்தக் குழுவிலும் இடம் பெற்றிருப்பார்கள். இந்நிலையில் இந்தியர்கள் இந்த ஆணையத்தில் இடம் பெறாமல் இருப்பதே நல்லது என்று கூறினார். ரவுலட் சட்டம் மற்றும் பத்திரிகைகளை ஒடுக்கும் சட்டங்களை பிரிட்டிஷார் கொண்டு வந்த போது அதற்கு கையொப்பமிட்டு ஏற்பு வாங்கியது இந்தியர்கள் தானே? என்று கேள்வி எழுப்பினார் பெரியார். ரவுலட் சட்டம் என்ற கொடூரமான ஒடுக்குமுறை சட்டத்தை உருவாக்கியது பிரிட்டிஷ் நீதிபதி ரவுலட் மட்டுமல்ல; குமாரசாமி சாஸ்திரி என்ற பார்ப்பனரோடு இணைந்து உருவாக்கப் பட்டதே அந்த சட்டம் என்ற உண்மையையும் பெரியார் போட்டுடைத்தார். ஆணையத்தைப் புறக்கணிப்பதால் சுயராஜ்ய கோரிக்கையை முன்னெடுக்க முடியாது. சட்டங்களை எதிர்த்து நடத்துகிற போராட்டங்களே நோக்கத்தை முன்னெடுக்கும் என்றார் பெரியார் (Progress could be achieved not by non co-operation but by constitutional agitation). பெரியார், பிரிட்டிஷ் ஆட்சிக்கு 'வால் பிடித்தவர்' என்ற தவறான ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளைப் பார்ப்பனர்கள் இன்று வரை கூறு வதற்கு சைமன் ஆணையத்தை வரவேற்றதையே முதன்மையானதாக சுட்டிக் காட்டுகிறார்கள். இதன் அரசியல் பின்னணியை அன்றைய சூழ லோடு பொருத்திப் பார்க்க வேண்டும் என்பதற் காகவே இந்த விளக்கங்கள் தேவைப்படுகின்றன.

பெரியாரை தேச விரோதியாக சித்தரிக்கும் பார்ப்பனர்கள், உண்மையில் சைமன் ஆணை யத்தின் முன் சாட்சி கூறாமல் புறக்கணித் தார்களா என்றால் அதுவும் இல்லை. இது பற்றி பெரியார் 'குடிஅரசு' இதழில் (15.7.1928) இந்த உண்மையை அம்பலப்படுத்தினார்.

"பார்ப்பன சபையும், வர்ணாஸ்ரம பார்ப்பன சபையும் சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கக் கூடாது என்று கூறியதோடு, சாட்சி சொல்லவும், ஒத்துழைக்கவும், தீர்மானங்கள் செய்யும் யதாஸ்து (கோரிக்கை மனு) தயார் செய்யும் அனுப்பி விட்டன. திருவாளர்கள் எம்.கே. ஆச்சாரியார், சத்திய மூர்த்தியார் போன்ற 'பிரபல' தேசியவாதிகள் எல்லோரும் மேற்குறிப்பிட்ட சபைகளில் அங்கத்தினர் களாகவும் தலைவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

தவிர முதல் வகுப்பு தேசியத் தலைவர் களான திருவாளர்கள் விஜயராகவாச் சாரியார், ஸ்ரீனிவாசய்யங்கார், எ. ரங்க சாமி அய்யங்கார் முதலியோர்களும் தங்கள் யதாஸ்தை (கோரிக்கை மனு) சைமன் கமிஷனுக்கு போய்ச் சேரும்படி செய்தாகிவிட்டது. அவைகள் கடை களிலும் விற்க ஏற்பாடு செய்தாகி விட்டது"

- என்று உண்மைகளை பொது வெளியில் அம்பலப்படுத்தினார் பெரியார்.

> - *பிரிட்டிஷ் ஆட்சியின் சைமன் ஆணையம் - மாகாண சுயாட்சி வழங்கியது; பெரியார் வரவேற்றார்.*
> - *பெரியாருக்கு 'தேச துரோகி' பட்டம் சூட்டிய காங்கிரசும் பார்ப்பனர்களும் மறைமுகமாக சைமன் ஆணையத்துக்கு அறிக்கைகளை அனுப்பினர்.*
> - *1927 வரை காங்கிரஸ் இந்தியாவுக்கு 'முழு சுதந்திரம்' வேண்டும் என்று கேட்கவே இல்லை.*

சைமன் குழுவை வரவேற்றதற்காக பெரியாருக்கு 'தேச துரோகி' பட்டம் சூட்டிய காங்கிரசும் பார்ப்பனர்கள் திரைமறைவில் தங்கள் சொந்த ஜாதி - வர்ண அமைப்புகளின் பெயரில் ஆணையத்துக்கு தங்களின் மேலாதிக்கத்துக்கான கோரிக்கைகளை முன் வைத்து இரட்டை வேடம் போட்ட வரலாற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்

அரசியல் சட்ட சீர்திருத்தங்களை ஆராய வந்த சைமன் குழுவைப் புறக்கணித்த காங்கிரஸ், இந்தியாவுக்கான ஒரு அரசியல் சட்டத்தை தங்களாகவே உருவாக்கப் போவதாக முடிவெடுத்தது, மோதிலால் நேரு தலைமையில் (ஜவஹர்லால் நேருவின் தந்தை) ஒரு குழுவை நியமித்து, ஒரு அறிக்கையை தயாரித்தது. 1929இல் தான் காங்கிரஸ் முதன்முதலாக 'முழு சுயராஜ்யம்' என்ற கோரிக்கையையே முன் வைத்தது. அதற்குப் பிறகும்கூட மோதிலால் நேரு குழு தயாரித்த பரிந்துரை முழு சுதந்திரத்தை வலியுறுத்தவில்லை, பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கட்டுப்பட்ட சுயராஜ் யத்தையே (Dominion Status) முன் மொழிந்தது. எத்தகைய கோரிக்கைகளை வைத்தாலும் அவை இந்தியாவின் நாடாளு மன்றத்தால் நிறைவேற்றப்பட்டாலும்கூட பிரிட்டிஷ் அரசரால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஜெனரலின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும் என்பதுதான் அப்போதிருந்த சட்டம். இந்தப் பின்னணியில் காங்கிரஸ் எடுத்த 'சைமன் ஆணைய'ப் புறக்கணிப்பு நிலைப்பாடு ஒரு வெற்று 'தேச பக்தி' நாடகம் என்றே கூற வேண்டும். சைமன் ஆணையப் பரிந்துரையில் -

"அதிகாரங்களைப் பங்கிட்டு வழங்கிய முறை (Devolution) முழுமையடைய வில்லை. வருங்காலத்தில் ஒவ்வொரு மாகாணமும் இயன்ற வரை தனது வீட்டின் எஜமானியாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். (It is our intention that in future each province should be as for as possible mistress in her own house. Thus independent life will be given to the provinces which will from the nucleus of the new federal structure - Commission Report vol II, Para 27) என்று கூறியதோடு ஆணையத்தின் அறிக்கை "கூட்டாட்சி தனித் தன்மையை பெற்றிருக்க வேண்டும்; தன்னுணர்வு என்ற பிரக்ஞையும் இருக்க வேண்டும்" என்றும் கூறியது.

சைமன் பரிந்துரைகளைத் தொடர்ந்து, பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தை 1935இல் உருவாக்கியது. இந்தச் சட்டம் மத்திய ஆட்சிக்குட்பட்ட அதிகாரங் களின் ஒரு பகுதியையே பிரித்து மாகாணங் களுக்கு வழங்காமல் வைஸ்ராய்க்கு தந்து விட்டது. எனவே மத்தியில் கூட்டாட்சி உருவாக வில்லை. மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களிலும் மத்திய அரசு குறுக்கீடு செய்வதாகவே இருந்தது. ஆனாலும், மாகாணங்கள் வெறும் நிர்வாகத் தரகர்கள் என்ற நிலை மாறி மாகாண அரசுகளும் அரசியல் சட்டத்திலிருந்தே அதிகாரங்களைப் பெறும் தனி வடிவத்தை, இந்திய வரலாற்றில் முதன்முறையாகப் பெற்றது என்கிறார், 'மாநில சுயாட்சி' ஆய்வு நூலை எழுதிய முரசொலி மாறன், அந்தக் காலகட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் இது முழு மாநில சுயாட்சி அல்ல; முழுமையான சுயாட்சியையே வழங்க வேண்டும் என்ற குரலையே ஒலித்தனர். அப்போது முழு மாநில சுயாட்சி பேசியவர்கள் சுதந்திர இந்தியாவில் ஏன் மாநில சுயாட்சியை கை கழுவினர்? அப்படி பேசுவதே தேச விரோதம் என்று கூறினர்.

**பார்ப்பன-பனியாக்களுக்கு அதிகார மாற்றம்**

'பிரிட்டிஷ் இந்தியா' காலகட்டத்தில் மாகாணங்களில் எழுந்த கோரிக்கைகளை முழு உடன்பாடு கொண்டு ஏற்காவிட்டாலும்கூட பிரிட்டிஷ் ஆட்சி அவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து வந்திருக்கிறது என்பதுதான் இதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய கூறு. "ஆணையத்தை அறிவித்து அறிக்கையை அலமாரியில் தூங்க வைக்கும்" இன்றைய தேச பக்தர்களைப்போல் அல்லாமல், ஏதோ ஒரு வகையில் தொடர் நடவடிக்கைகளை மேற் கொண்டு வந்தது என்பதை நாம் வரலாற்றில் பார்க்கிறோம். 1935இல் பிரிட்டிஷ் அரசு உருவாக்கித் தந்த சட்டம் தான் 1950இல் இந்தியாவில் உருவான அரசியல் சட்டத்துக்கும் அடிப்படையாக அமைந்தது.

(தொடரும்)

**நன்கொடை**

25.7.2015 அன்று பிற்பகல் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெருந்தொற்று காலத்தில் நடந்த இல்லத் திறப்புவிழா நிகழ்வுக்கு செல்லமுடியாமல் போன, கும்பகோணம், மருதாநல்லூர் கந்தவேல் இல்லம் சென்றிருந்தார்.

அப்போது கீழ்கண்டோர் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக வழங்கினர்.

க.கந்தவேல், நந்திவனம் : ரூ.1000/-; பேராசிரியர் ம.சேதுராமன், சாக்கோட்டை : ரூ.1000/-; முனைவர் உ.பிரபாகரன், கும்பகோணம் : ரூ.1000/-.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் - ஆசிரியர்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## உணர்வுகள் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்

# டார்வின் தாசன் இணையர் அமுதாராணி படத்திறப்பு




திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகப் பொருளாளர் டார்வின் தாசன் இணையர் அமுதா ராணி படத்திறப்பு நிகழ்வு திருச்சி தங்கம் நகர், பொன்மலைப்பட்டியில் உள்ள டார்வின் தாசன் புதிய இல்லத்தில் ஜூலை 25 அன்று பகல் 11 மணியளவில் நிகழ்ந்தது. அவரது படத்தை பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்தார்.

அவரது மறைவைத் தொடர்ந்து அடுத்த சில நாட்களில் முடிவெய்திய அமுதாராணியின் தாயார் சுப்புலட்சுமி அம்மையார் படமும் திறக்கப்பட்டது. நிகழ்வில் சென்னை - திருச்சி மாவட்ட தி.வி.க.தோழர்களும், த.பெ.தி.க. தோழர்களும் தோழமை அமைப்பினரும் பங்கேற்றனர். தொடக்க உரையாக டார்வின்தாசன் தனது இணையர் தனது கொள்கையிலும் வாழ்க்கையிலும் இணைந்து பணியாற்றியதை உணர்வுகளுடன் நினைவு கூர்ந்தார்.

கழக நிகழ்வுகளுக்கு தனது இணையருடன் பங்கேற்பதை வழக்கமாக்கிக் கொண்டவர் டார்வின் தாசன். கழகத் தோழர்களுடன் கொள்கை நட்பு உறவுகளை வளர்ப்பதில் மிகவும் ஆர்வம் காட்டியவர் அமுதா ராணி. தவறான முடிவுகள் எடுக்க நேர்ந்தால் அதை சுட்டிக்காட்டி திருத்துபவராகவும் கழக நிகழ்வுகளில் தமது அங்குசம் பதிப்பக வெளியீடுகளை மக்களிடம் கொண்டு சென்று விற்பனை செய்வதிலும் தோழர்களை அன்புடன் வரவேற்று உபசரிப்பதிலும் அமுதா ராணி ஆர்வம் காட்டியதையும் டார்வின் தாசன் நினைவு கூர்ந்தார். தோழர்கள் பலரும் அவரது குடும்பத்துடன் நெருக்கமாகப் பழகிய நினைவுகளை நினைவு கூர்ந்தனர்.

தமிழ்நாடு முழுதும் கருஞ்சட்டை நம்மை ஒரே குடும்பமாக இணைக்கிறது. பெரியாரிய கொள்கை தோழர்களை நெருக்கமாகவும் உணர்வாளர்களாகவும் மாற்றி விடுவதை தோழர்கள் நெகிழ்ச்சியுடன் சுட்டிக் காட்டினர்.

தமிழ்த் தேசிய அமைப்பிலிருந்து திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு வந்த டார்வின்தாசன், அடக்கம் அமைதி இனிமையாகப் பழகுதல் தோழர்களுடன் இணக்கமாக செயல்படும் பண்புகளைக் கொண்டவர் என்று பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சுட்டிக் காட்டினார். கொள்கையிலும் இணையர்களாக வாழ்ந்தவர்களின் பிரிவு மரணம் என்பது மிகவும் தாங்க முடியாத கவலையையும் மன அழுத்தத்தையும் உருவாக்கி விடுகிறது என்றாலும் ஒரு பெரியாரிஸ்ட் இவற்றையும் கடந்து செல்லத்தான் வேண்டும் என்றும் பெரியாரே முன்னுதாரணமாக இதில் இருக்கிறார் என்றும் குறிப்பிட்டார். நாகம்மையார் மரணத்தின் போது பெரியார் விடுத்த இரங்கல் அறிக்கையில் குடும்பச் சுமையிலிருந்து தனக்கு விடுதலை தந்து விட்டது என்று பெரியார் எழுதினார்.

இலண்டனில் இந்திய அமைச்சருக்கு ஆலோசகர் பதவி ஏற்கச் சென்ற சர். ஏ.டி. பன்னீர் செல்வம், விமான விபத்தில் மரணமடைந்தபோது, 'திராவிட நாடு' கிடைப்பதற்கான ஒரு நல்ல வாய்ப்பை அவர் வழியாக முயற்சித்திருக்க முடியும் என்ற நிலையில் அவரது இழப்பு திராவிட நாடு கொள்கைக்கே பின்னடைவைத் தந்து விட்டதே என்று பெரியார் கண்ணீர் அறிக்கை வெளியிட்டார்.

"பன்னீர் செல்வமே காலம் சென்று விட்டாயா? நிஜமாகவா? கனவா? தமிழர் சாந்தி பெறுவாராக" எனும் தலைப்பில் பெரியார் தனது அறிக்கையில் (குடிஅரசு) இவ்வாறு எழுதினார்.

"என் மனைவி முடிவெய்திய போதும் நான் சிறிதும் மனம் கலங்கவில்லை; ஒரு சொட்டு கண்ணீர் வடிக்கவில்லை. என் தாயார் இறந்த போதும் இயற்கை தானே, 95 வயதுக்கு மேலும் மக்கள் வாழவில்லையே என்று கருதலாமா, இது பேராசை அல்லவா என்று கருதினேன். 10 வயதிலேயே லண்டனுக்கு அனுப்பி படிக்க வைத்த ஒரே அண்ணன் மகன் படித்து விட்டு இந்தியா வந்து சேர்ந்து சரியாக 20 வயதில் இறந்து போனதற்காகவும் பதறவில்லை; சிதறவில்லை. பன்னீர் செல்வத்தின் மறைவு மனதை வாட்டுகிறது. தமிழர்களைக் காணுந்தோறும் தமிழர் நிலையை எண்ணுந் தோறும் நெஞ்சம் பகீரென் கின்றது" என்று எழுதினார்.

கொள்கை வழிப்பட்ட மரணத்தையும் உறவு வழிப்பட்ட மரணத்தையும் பெரியார் எப்படி அணுகினார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

'கொரானா' பெருந்தொற்று, ஒரு பாடத்தை மக்களிடம் உணர்த்தியிருக்கிறது. மதம், கடவுள், சடங்குகளைவிட நோய் தடுப்புக்கான மருத்துவ விஞ்ஞானமே முதன்மைத் தேவையாகிறது என்பதை உணர்த்தியிருக்கிறது. திருமணம், மரண இறுதிச் சடங்குகளில் தலைகீழ் மாற்றங்களை கொரானா காலம் உருவாக்கிவிட்டது.

கோயில், மசூதி, சர்ச் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. மக்கள் மூடுவது சரிதான் என்று ஒப்புக் கொண்டார்கள்; எதிர்க்கவில்லை. அதே நேரத்தில் கொரானாவுக்கு எப்போது மருந்து வரும்? எந்த நாடாவது தடுப்பூசி கண்டுபிடிக்காதா? சீக்கிரம் தடுப்பூசி வராதா என்பதே மக்கள் கவலையாகவே இருந்ததே தவிர, வழிபாடு நடத்தவில்லையே என்று கவலைப்படவில்லை. வழிபாடு நடத்தினால் கொரானா வராமல் தடுத்துக் கொள்ள முடியும் என்று நம்பவும் தயாராக இல்லை. இது கொரானா கற்பித்து வரும் பகுத்றிவுப் பாடம் என்றார் விடுதலை இராசேந்திரன்.

நிகழ்விற்கு திருச்சி மாவட்ட அமைப்பாளர் புதியவன் தலைமை வகித்தார்.

சீனி விடுதலையரசு (கொள்கை பரப்புச் செயலாளர் தபெதிக), மீ.ஆரோக்கியசாமி (திவிக திருச்சி மாவட்டத் தலைவர்), இரா உமாபதி (திவிக தென் சென்னை மாவட்ட செயலாளர்), செல்வராசு (திவிக ஈரோடு மாவட்டத் தலைவர்), தமிழ்க்கனல் (தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி), தமிழ்ப்பித்தன் (தபெதிக தலைமைக்குழு உறுப்பினர்), தமிழகன் (நதிகள் பாதுகாப்புக் கூட்டியக்கம்), அன்பு தனசேகர் (திவிக தலைமைக்குழு உறுப்பினர்), தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர் திவிக), முனைவர் ஜெய ஜீவகனி (தியாகராயர் பொறியியல் கல்லூரி மதுரை), அய்யனார், திவிக தலைமைக் குழு உறுப்பினர் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர்.

இறுதியாக திருச்சி மாவட்ட செயலாளர் மனோகரன் நன்றி கூறினார்.

# கனிமவள சுரண்டல்: வேதாந்தா குழுமத்துக்கு பா.ஜ.க. முறைகேடாக சலுகை

நாட்டின் கனிம வளங்களை சுரண்டி கொழுக்கும் வேதாந்தா பன்னாட்டு நிறுவனத்துக்கு ஒன்றிய மோடி ஆட்சி முறைகேடாக சலுகைகளை வழங்கி வருகிறது. பன்னாட்டு நிறுவனங்களின் முழு ஆதரவோடு நாட்டை பார்ப்பனியமாக்குவதே ஒன்றிய ஆட்சியின் இலட்சியமாக இருக்கிறது.

உச்சநீதிமன்றம் வேதாந்த குழுமத்துக்காக கோவாவில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சி குறுக்கு வழியில் சட்டத்தை மீறி உதவிடும் முயற்சிகளை வன்மையாகக் கண்டித்துள்ளது.

2018ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு வேதாந்தா நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட நிலக்கரி தோண்டி எடுக்கும் சுரங்க ஒப்புதலை இரத்து செய்தது. பா.ஜ.க. ஆட்சி இந்த ஒப்பந்தங்களை வழங்கி இருக்கிறது. கோவாவின் சுற்றுச் சூழலுக்கு பேராபத்தை உருவாக்கக்கூடிய திட்டம் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் 102 பக்க தீர்ப்பில் கூறியிருந்தனர்.

ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதில் நடந்த முறைகேடுகளையும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. இந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி லோக்கூர் 2018 டிசம்பர் 30 தேதியிலும், நீதிபதி குப்தா, 2020 மே 6ஆம் தேதியிலும் ஓய்வு பெற்றனர். இவர்கள் பதவி ஓய்வுக்காகக் காத்திருந்து, அதற்குப் பிறகு கோவா பா.ஜ.க. ஆட்சி 2020இல் தீர்ப்பை எதிர்த்து சீராய்வு மனுக்களை தாக்கள் செய்தது. இந்த முறைகேட்டை உச்சநீதிமன்ற நீதிபதிகள் டி. ஒய். சந்திர சரத், எம்.ஆர். ஷா ஆகியோரடங்கிய அமர்வு சீராய்வு மனுக்களை தள்ளுபடி செய்து கோவா ஆட்சியை கடுமையாகக் கண்டித்துள்ளது.

இதேபோல் நீட் தேர்வு செல்லாது என்று உச்சநீதிமன்றம் மூவர் அமர்வில் இரு நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். அனில் தவே என்ற பார்ப்பன நீதிபதி மட்டும் நீட்டுக்கு ஆதரவாக தீர்ப்பு எழுதினார். எதிராக தீர்ப்பு வழங்கிய இரண்டு நீதிபதிகள் ஓய்வுக்காகக் காத்திருந்து பிறகு ஆதரவாக தீர்ப்பு வழங்கிய அனில் தவே நீதிபதி அமர்வுக்கு மூன்று ஆண்டு கழித்து மறுசீராய்வு மனுவை ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி மருத்துவக் கவுன்சில் வழியாக மனுதாக்கல் செய்து தீர்ப்புக்கு தடை வாங்கி இப்போது நீட் தேர்வை நடத்தி வருகிறது.

## கடுவனூரில் கழகத் தோழர் தாயார் நினைவேந்தல் படத்திறப்பு

கள்ளக்குறிச்சி, ஜூலை 26 காலை 11 மணியளவில் சங்கராபுரம் வட்டம், கடுவனூர் கிராமத்தில் திராவிடர் விடுதலைக் கழக சார்பில் மாவட்ட துணை செயலாளர் நாகராஜ் தாயார் மீனாட்சி அம்மாள் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னதாக மீனாட்சி அம்மாள் இறப்பில் தந்தை பெரியாரின் கொள்கைகள் முன்னெடுக்கும் விதமாக இறுதி அடக்கத்தில் எவ்வித மத சடங்கு சம்பிரதாயங்கள் இன்றி சுயமரியாதை முறையில் அடக்கம் செய்யப்பட்டது.

இறுதி ஊர்வல நிகழ்வில் சாதி, மத, மூடநம்பிக்கைகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்களுக்கு எதிரான முழக்கங்களை மயானம் வரையில் கழக தோழர்களால் எழுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து மீனாட்சி அம்மாள் நினைவாக படத்திறப்பு நினைவேந்தல் மாவட்ட துணை செயலாளர் நாகராஜ் இல்லத்தில் கழக தோழர்களால் நடத்தப்பட்டது.

நிகழ்விற்கு தோழர் வெற்றிவேல் தலைமையேற்றார். பெரியார் வெங்கட், ஜோதி ஆப்செட் சரவணன், சாக்ரடீஸ், கருங்குழி நாகராஜ், வாலிபர் சங்க தோழர் பூமாலை, ரிஷிவந்திய அமைப்பாளர் கார்மேகம், துளசி, கல்லை சங்கர், குமரேசன், அன்பு, மக்கள் குடியரசு இயக்க ஜான் மண்டேலா உள்ளிட்ட தோழர்கள் முன்னிலை வகித்தனர்.

மாநில செயற்குழு உறுப்பினர் அய்யனார் படத்தைத் திறந்து வைத்து நினைவேந்தல் உரை நிகழ்த்தினார். நிகழ்ச்சிகளை மாவட்ட செயலாளர் இராமர் ஒருங்கிணைத்தார். கழகத் தோழர் குமார் நன்றி தெரிவித்தார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 29th July 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN